News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol. 156 Jaffna, Friday. 21 April 1995 No. 16

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*
*Apply to:*
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Christian Conference of Asia

Christian Conference of Asia General Assembly is meeting this time in Sri Lanka at Hotel Marriot in June, 1995. There will be 350 participants from all over the world.

Rev. S. Jeyanesan, our Pastor in Colombo has been nominated by the Diocesan Council as our official representative to the conference. Miss. Carol Arulanandham who is our Y. F. President is being nominated by the N. C. C. of Sri-Lanka as their Nominee. The Rev. D. S. Thiagarajah will represent our Diocese at the extra-ordinary assembly of the C. C. A. which is being conducted to study the New Constitution of the C. C. A.

## Well-Done Sutharshana


Miss. Sutharshana Mahendran who came first in the Pilot Examination of the Kalvi Mempaddu Kalaham has once again proved her mettle by securing Distinctions in all the eight subjects at the GCE O/L Examination at Jaffna College.

## Levi Spaulding Boys'Home performance at the G. C E. (O/L) Examination

We are happy to report that Seven Students of the Levi Spaulding Home had qualified themselves at the GCE O/L Examination to follow the GCE A/L course The following are the students who will be joining the GCE A/L class of Jaffna College.

Victor S, Thayaparan I, Sivaharan A, Rajeevan T, Raveendran P. D, Lingeswaran Sg D, Tharmapalan T.

## Dean and Paula Hart — Volunteers In Mission Uniting Church in Australia



Dean and I have been in Sri Lanka based in Vavuniya for nearly six months. We are enjoying our time here very much.

We were invited to participate in the Annual Diocesan Meeting held in Jaffna during February. We accepted eagerly as we wanted to visit Jaffna and it was a chance to see something of the whole CSI Church which was too good to refuse.

(Continued on page 2)

## 41 years of faithful service

Miss. Stella Selvamany Sellathurai completed 41 years of faithful service on the 17th of April 1995. She joined Jaffna College as an English Assistant Teacher in 1954 and had served the Institution under five Principals. She was a successful teacher of English and won the best English Teachers' Award of the District. She also won the prize for reporting for work on all school days of the year by the Principal of Jaffna College. Miss. Sellathurai served as Head of the English Department, Head Primary school and Supervisor - Middle school. She was also interested in Net Ball and served as the coach of the team for many years.

## Wedding

The C. S. I. Church, Navaly was the scene of a pretty wedding in the evening of the 19th of April when Mr. Jeyamohan son of Mr. C. Jeyaratnam and Mrs Jeyaratnam of Navaly led to the altar Sutharshini daughter of Mr. & Mrs. Subramaniam of Navaly. The marriage was solemnized by Rev. V. N. Tharmakulasingam, the Pastor of the Navaly Church. The Bridegroom is a grandson of Bursar Sinnappah of revered memory. The wedding service was followed by the reception in which many relations and friends participated.

Rev. V. N. Tharmakulasingam was assisted by Rev. S. C. Arnold. Sevak Sam Alfred preached the homily.

Mr. Dharshan Winston son of the late Mr. P. Cathiresu and Mrs. Cathiresu of Urumpirai led to the alter Thangi daughter of Mr&Mr G. Mylvaganam of Jaffna at the New Life Church, Pfingst Mission, Damm Str. 30b, 3400 Burgdorf, Swiss on Saturday the 17th December 1994.

## Visit to Batticaloa

The Bishop Rt. Rev. Dr. S. Jebanesan, The Rev. S. Jeyanesan, Pastor of the CSI Church, Colombo and Mr. C. Jeyaratnam, Treasurer of the JDCSI visited our Church Centres in Batticaloa on the 3rd, 4th and 5th of April, 1995. They were accompanied by Mr. C. Arumanayagam, Project Officer and

(Continued on page 6)

## THANKSGIVING SERVICE

A service to thank God for the life and work of Mr. Samuel Saravanamuthu Selvadurai was conducted at the CSI Church 17. Frances Road Wellawatte on Sunday the 2nd April at 5.00 p m. This Thanksgiving service was arranged by the Uduppiddy American Mission College Past Pupils Association, Colombo Branch. Tributes were paid by Dr. R. Mahalingasivan and Mr Kandiah Neelakanden. The sermon was preached by the Rt. Rev. Dr. S. Jebanesan. The Past Students of Uduppiddy American Mission College provided refreshments for all those who attended the service.

## Jaffna Diocese of the Church of South India

**Deacons Ordination**

**The Rt. Rev. Dr S. Jebanesan** Bishop of the Jaffna Diocese of the Church of South India will ordain as Deacons

**I. Arulbalan** Worker Sathiapuram and Anaicottai Churches
**Anthony Sebastian** Worker Araly and Moolai Churches
**N T. Jeyanesan** Worker Delft Church
**T. E. Ashokumar** Worker Kudathanai Church

**at 8 30 a. m on Wednesday 10th May 1995**
**at Cathedral Church Vaddukoddai**

**Members and friends are cordially invited**

Vaddukoddai,
Sri Lanka.

**C. T Roberts**
Secretary
Jaffna Diocese C. S. I.

## DEAN AND PAULA HART.........

(Continued from page 1)

We travelled to Jaffna with about 14 others, it took us 18 hours to get from Vavuniya to Jaffna and we experienced for ourselves how difficult the journey is.

We had a day to rest and recover, then the Diocesan meeting started. We were grateful all the reports were printed in English and Tamil. Unfortunately our Tamil skills are not sufficient to cope with a church meeting, but we feel it is good that the proceedings of the annual meeting of the CSI - a tamil church, is held in its native tongue.

Following the conclusion of the meeting, we visited different CSI projects around Jaffna including Uduvil Girls' College, Levi Spaulding Boys' Home, House of Hope, Green Memorial Hospital, City Mission and Jaffna College. We were impressed that despite the war, the economic embargo and the repeated destruction, the CSI in Jaffna is growing and developing new projects.

Our work in Vavuniya is in two parts - refugee work and work at St. Peters Girls' Home. The refugee work is very much a team effort. We rely heavily on local pastors, especially Rev. Suriyakumar. They have provided insights into people's situation, cultural principles and practices. They have learnt a lot and have followed their lead when we were unsure about what to do.

Our focus for the refugee work has been to help in such a way as to encourage self reliance, helping people as they help themselves. So far we have concentrated on small scale chicken farming for eggs. This has been people's interest and is a reliable, regular income as eggs are sold every day. We have provided some materials for shed construction, day old chicks and feed for the chicks until they begin laying.

The participants build the shed and raise the chicks and once they begin laying, buy feed and sell the eggs. It is our hope that they will continue chicken farming and expand in time, securing an increasing income for the future.

As we worked with people on this project it became obvious that housing was a priority for people. For some, their shed for the chickens was better than their houses. This was a concern for us. Often the amounts needed were not large, but out of reach of these people who did not have a regular income (as yet.) Inadequate housing affects the success of the income generation programme. Thus we decided to help some people with materials to repair, rebuild and complete their houses. Now that the project is underway and our Tamil a little better. We no longer rely on the pastors so heavily. We visit everyone regularly and it has been a good opportunity for us to develop friendships with people.

Every evening we spend at St. Peters Girls' Home. We value the friendship of all the girls and really enjoy our time there. We help the girls with their English and they help us with our Tamil. We play games, dress their wounds and "suma" with them. We worked with the warden to introduce a chart to encourage the girls to do their duties everyday which is working well.

When we go away for short times we miss the girls very much and know it will be very difficult to say goodbye to them when we leave in September, as, it will be sad to say goodbye to all our friends in Sri Lanka.

## 'THE MORNING STAR'

## List of Annual Subscribers

### Colombo

The Librarian YMCA Fort
Colombo

Dr R P Rajakone
35 Boswel Place Colombo 6

Mrs J M Handy
18 Collingwood place Colombo 6

Mr A K Ratnaraja
21 Ramakrishna Road Colombo 6

Mr E T Parmananthan
As P3 279 Rd A De Mel
Mawatha Colombo 3

The Rev J Sarvanandam
St. Pauls' Vicrage 9 Kynsey Road
Colombo 8

Mrs E G Tharmaseelan
41 3/8 W A Silva Mawatha
Colombo 6

Justice W Thambiah
St Cleather J Lane Colombo 3

Justice T W Rajaratnam
365/4 R A Demel Mawatha
Colombo 3

The National Christian Council
490 Havelock Road Colombo 6

The Registrar of Book and
Newspaper
7 Reid Avenue Colombo 7

Mr. Milroy Selvaraja
23 Madangawatte Road
Colombo 6

The Sri Lanka Press Council
45 Gregorys Road Colombo 7

The Librarian Y M C A
St Michaels Road Colombo 3

Mrs D Jeyandaran
No 25 Morning Apartment
98 3/7 Manning Place Colombo 6

Mr G A Saganthan
14 2nd Malika Kantha Lane
Maradana

Mr C D Chinnakone
3 E Block Bambalapitiya flats
Colombo 4

Mrs P Hensman
4 Somasundram Lane Off Station
Lane Colombo 6

Dr Mrs M Arudchelvam
A/2 Bambalapitiya Flats
Colombo 4

Mr I Thevamanoharan
19 Charlen Drive Colombo 3

Mr J Olegasekeram
2 A-3 Sripala Road Mt Lavina

Mr Albert Rasiah
77/1 Davidson Road Colombo 4

Mr W N Rajaratnam
U 1/2 Anderson Flats Colombo 5

Mrs S K Ratnaraja
C S I Church 17 Francis Road
Colombo 6

Mr K D Arasaratnam
22 A Collingwood Place
Colombo 6

Mrs K B Rajaratnam
50/2 Perera Avenue Kohuwela

Mrs P Arasaratnam
12 Ramakrishna Place Colombo 6

Mrs N Gunaraja
B/5 2-6 Soysapura Flats Moratuwa

Mrs A Sri Padmanathan
81/5 Hampden Lane Colombo 6

Mrs Sherrina Mills
48/7/1 Dharmaruna Road
Colombo 6

Mr D G Newton
No 59 Moor Road Colombo 6

Mr Sam Vadivel
43/57 Pooararama Mawatha
Colombo 5

Mr D X A Pillai
8 25th Lane Green Path
Colombo 7

Mr A N S Jeevajothi
K N H Office 490/2 Houer lock
Road Colombo 6

Mr T Chelvaraja
4 Prince Park Terrace Colombo 5

Mr R W Lyman
2 Inner Fair lane Road Dehiwela

Mrs T Hastings
8912 Dickumans Road Colombo 5

Field Director Christian Children
Fund of Canada
53 B Bullers Lane Colombo 7

Mr P Rajaratnam
32/1 Frazer Avenue Dehiwela

Mr J Rajasingam
M 1/7 Anderson Flats Colombo 5

The Rev S K Kadirgamar
135 City Mission Daen Street
Colombo 12

Mrs E V Pushparaja
11/3 Circular Road Mt Lavinia

Mr A S Balaratnam
u/1/8 Anderson Flats Narahenpitiya Colombo 5

Dr M Kanagaratnam
3 Alexandra Road Colombo 6

Miss G Raju
No-6 Ediriena Avenue Dehiwela
21/5 Bullers Lane Colombo 7

Mrs P Aiyathurai
No 4 Ebert Place off Dickmans
Road Colombo 5

Mr V Joshua
84 Lewis Place Negombo

Mr Ratnaventhan
84 Lewis place Negombo

(Continued on page 6)

# திருப்பணியாளரின் பயிற்சியும் பணியும்

கொலோசெயர் 1 : 23 - 29

நான்கு ஆண்டுகள் பயிற்சிபெற்று பக்குவப்படுத்தப்பட்டு இன்று கல்லூரியிலிருந்து விடைபெறும் என் உடன் ஊழியர்களே இனிஉங்களை மாணவர்களாக அழைக்காமல் உடன் ஊழியர்களே என்றுதான் அழைக்கவிரும்புகிறேன்.

செராம்பூர் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றபிறகு நடைபெறும் முதல் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றி கலந்து கொள்வதிற் பெருமகிழ்வெய்துகிறேன். அதிலுங் குறிப்பாக தமிழ்நாடு இறையியற் கல்லூரி பெற்றெடுத்த பிள்ளைதான் இந்த மருதனாமடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி என்பதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இன்று கல்லூரியிலிருந்து விடைபெற்றுச் செல்லும் உடன் ஊழியர்களே கடந்த 4 ஆண்டுகளில் திருப்பணிக்கென நீங்கள் பெற்ற ஆயத்தத்தைக் குறித்துப் பாருங்கள்.

வசனம் 23- இன்படி முதலாவது நீங்கள் கேட்டறிந்த சுவிசேஷத்திலுள்ள நன்னம்பிக்கையை விட்டு விலகாதிருங்கள் இரண்டாவது அஸ்திபாரமிடப் பட்டவர்களாயிருங்கள் உறுதியுள்ளவர்களாயிருங்கள். அசைக்கப்படாதவர்களாயிருங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசத்தில் நிலைத்திருங்கள். நற்செய்தியை பறைசாற்றப்போகிற ஒவ்வொரு ஊழியனுக்கும் இந்த ஆயத்தம் தேவை. ஆழமான அசையாத அஸ்திபாரமே உங்கள் எதிர்காலப் பணிக்கு உதவும் கடந்த 4 ஆண்டு காலப்பயிற்சிதான் உங்கள் திருப்பணிக்கு அடித்தளமிட்ட நாட்கள்

திருப்பணிக்கென ஆயத்தப்படுத்தப்பட்ட உங்களை எதிர்நோக்கி இருப்பதென்ன? 24 ம் வசனத்தின்படி பாடுகள் ஆனால் பவுல் இந்தப் பாடுகளிலும் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறுகிறார் அதிகமான அளவில் பாடுகள் இருந்தாலும் சந்தோஷப்படுகிறேன் என்கிறார். ஏன் இவ்வாறு கூறுகிறார்? கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவடைந்தவற்றை அவ சபையாகிய திருச்சபைக்காக அவரின் மாமிசத்தில் அவர் நிறைவாக்கி வருவதினால் தான், கிறிஸ்து நிறைய பாடுகள் பட்டிருந்தாலும் அது முற்று பெறவில்லை. அவருடைய அடியார்களின் பாடுகளினால் தான் அந்தக் குறைவை குறைவு செய்யமுடியுமென்கிறார். ஆகாலால் உங்கள் திருப்பணியாலும். உங்கள் உடலான பாடுகளின் மூலமாகவும் பணி செய்ய வேண்டியிருக்கும். இதையே பவுல்தான் கொரிந்து சபைக்கெழுதும் இரண்டாம் கடிதத்தில் (IIகொரி 4:10) ''இயேசுவின் ஜீவன் எங்கள் சரீரத்தில் வெளிப்படும் படி, இயேசுவின் மரண அனுபவத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்'' என்கிறார். இயசுவின் மரண அனுபவத்தை (பாடுகள்) எப்பொழுதும் சுமந்து திரிவதென்றால் அதை எப்படி தாங்குவதெனக் கேட்கலாம். இச்சமயத்தில்தான் பவுல் ஒரு இரகசியத்தைச் சொல்கிறார்.

வசனம் 27 இல் கிறிஸ்து உங்களுக்குள் உங்களில் குடிகொண்டிருக்கும்பொழுது உங்களால் அனைத்தையும் தாங்கமுடியுமென்கிறார். இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள்ளும் இருக்கிறார் பவுலால் கூறமுடிந்தது என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்ய இயலாது நீங்கள் தனித்துவிடப்படுவதில்லை பாடுகள் பல ஏற்க இருப்பனும் இயேசுவின் துணையோடு துணிந்து செல்லுங்கள் இயேசு நமது பணியில் நமமுடனிருக்கிறார் என்பதே மகிமையான நம்பிக்கை.

ஆயத்தம் செய்த நீங்கள் பாடுகளைச் சந்திக்க கிறிஸ்துவின் ஆற்றல் பெற்றிருக்கிற நீங்கள் செய்ய வேண்டிய பணி யாது? 28 ஆம் வசனத்தின்படி எல்லோரையும் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக நிறுத்தும்படி எல்லா மனிதருக்கும் புத்தி சொல்லி எல்லா மனிதருக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் செய்யுங்கள.

இதிலே முதலாவது நீங்கள் செய்ய வேண்டியது புத்தி சொல்லுதல். புத்தி சொல்லுதலென்றால் மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது உங்களுக்குத்தான் அனைத்தும் தெரியுமென்று புத்தி சொல்கிறதல்ல அதற்கு மாறாக துன்பத்திலும் துயரத்திலும் துவண்டு போயிருக்கிறவர்களுக்கு ஆறுதல் கூறுதலே. ஆற்றுப்படுத்தும் பணி செய்தலே பெரும்பாணாற்றுப்படை சிறுப்பாணாற்றுப்படை என்ற சங்க இலக்கியங்கள் ஒரு பாணன் ( யாழ்ப்பாணராகவுமிருக்கலாம் ) பிறிதொரு வறிய பாணனுக்கு வழிகாட்டுகிறான்.

(அருட் திரு. கம்பர் மாணிக்கம் முதல்வர் தமிழ்நாடு இறையியற் கல்லூரி மதுரை 18 4 95 செவ்வாய்க்கிழமையன்று உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற, சுன்னாகம் இறையியற் கல்லூரி மாணவர்களின் வழியனுப்பு விழாவில் ஆற்றிய உரை )

வழிகாட்டி ஆறுதல் காணுதலே ஆற்றுப்பணியாகும். இந்த ஆற்றுப்படுத்தும் பணியிலே ஈடுபடுங்கள். அத்தோடு போதிக்கும் பணியிலேயும் ஈடுபடுங்கள். ஏனெனில் நீங்கள் போதகராகப் போகிறீர்கள ஆற்றுப்படுத்தும் பணியையும் போதகப் பணியையும் நீங்கள் செய்யும்போது கிறிஸ்துவையே நீங்கள் அறிவிப்பீர்கள்.

நிறைவாக உங்களுடைய பொதுவான அணுகுமுறை எவ்வாறிருக்க வேண்டுமெனில் போராடி உழைப்பதே. இறைவனுடைய ஆற்றலுடன் போராடல். போராடல் போராளி என்ற சொற்களெல்லாம் உங்களுக்குப் புதிதல்ல கிறிஸ்துவின் துணை கொண்டு போராடுங்கள் உழையுங்கள் நிச்சயம் பலன் கிடைக்கும். இத்தோடு பழைய ஏற்பாட்டிலிருந்தும் ஒரு வசனத்தை நினைவூட்ட விரும்புகிறேன். இது யூதர் அழிக்கப்பட வேண்டும் என அரச கட்டளையிட்டிருந்த நேரத்தில் எஸ்தருக்கும் கூறப்பட்ட சொற்களாகும். '' யூதரெல்லாரும் அழிக்கப்படுகையில் ராஜ அரண்மனையிலிருப்பதால் நீ மாத்திரம் தப்பிக் கொள்வாயென்று எண்ணாதே. இந்த சமயத்தில் நீ மௌனமாயிருந்தால் பயனில்லை'' என்பதே. போராட்டமும் சண்டையும் நிறைந்த சூழலில் உன்னை மட்டும் தப்பித்துக்கொள்ள முயலாமல் உன் இனத்தைக் காப்பாற்ற செயற்பட வேண்டும். மௌனமாயிருக்கக் கூடாது.

## உங்கள் ஆரோக்கிய வாழ்விற்கு!!

- ஜலதோசம் என்னும் தடுமன் கொண்டவர்கள் படுக்கு முன் வெங்காயததை (பச்சையாக) தின்றுவிட்டு சுடு தண்ணீர பருகினகல் தடிமன் நீங்கும்
- காய்ச்சிய பாலுடன் பனங்கற்கண்டு போட்டு குடித்தால் வறட்டு இருமல் நீங்கும்
- தினமும் பச்சையாகவே சமைத்தோ தக்காளி சாப்பிடுபவர்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பார்கள்
- தாது விருத்திக்கும் இரத்த விருத்திக்கும் பேரீச்சம் பழம் சிறந்தது இப் பழம் இரத்த சோகையையும் போக்கும்
- நொச்சி தழையை கொதிநீரில் போட்டு வேது பிடித்தால் சளி தடுமன் தலைவலி போகும்

## திருவும் அருள்திருவும்



அருள்திரு:- சென்ற ஞாயிறு உன்னைப் போல் அயலானையும் நேசி என்று போதித்தேன் அப்படி யார் செய்கிறார்கள்.

ரு:- எங்கட கோழிதான் அப்படி செய்கிறது. அயல்வீட்டிலைபோய் முட்டை போட்டு விட்டு வருகின்றது.

-மணிமாறன்

## திருப்பாடுகள் பற்றிய பஜனை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தினரால் லெந்து காலம் தொடர்பான 'பஜனை' நிகழ்ச்சியொன்று கடந்த புதன்கிழமை (3 1 1 95) மு. ப. 10 மணிக்கு ஆரம்பித்து நடைபெற்றது. லெந்து காலம் தொடர்பான பாடல்கள் வேத வசனங்கள் கருத்துரைகள் மாணவ மாணவிகளால் வழங்கப் பட்டது. நவாலித் தென்னிந்திய திருச்சபைப் போதகர் அருட் திரு தர்மகுலசிங்கம் அடிகளார் தமது அருளுரையில் 'தபசு' காலம் மெய்ஞானத்தினை உணர்ந்து மனந்திரும்பி எமது கிறிஸ்தவ வாழ்வினைச் சீராக்கிக் கொள்வதற்கான 'சந்தர்ப்பமாகப் பயன்படுத்த வேண்டும் என எடுத்துக் கூறினார். இவ்வழிபாட்டு ஆராதனை கலாசாலையில் கிறிஸ்தவ மன்றத் தலைவர் திரு. ப தேவமித்திரனது தலைமையில் நடைபெற்றது.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841
மலர்: 156 21-04-1995 இதழ்: 16

## வாழ்வளிக்கும் அருட்செய்தி

*''கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் - உலகமுய்யத்
கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான்''*

கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்தார் - தமது சாவால் சாவால்மேல் வெற்றி கொண்டார் - 'சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது: சாவே, உன் வெற்றி எங்கே? [1 கொரிந்தியர் 15: 55] இதுவே, பவுலடியாரின் அனுபவம் சார்ந்த செய்தி. ஆதித்திருச்சபையின் மையச் செய்தியும் இதுவே ஆம் தீமைக்கு சாவுமணி அடித்தாயிற்று. வெற்றிவேந்தனாகிய நம் இயேசுபிரான் நம்முடன் இருக்கும் போது நமகேது பயம்? - 'பயப்படாதீர்கள்!' என்பதே, உயிர்த்தெழுந்த ஆண்டவரின் செய்தி இதுவே, வாழ்வளிக்கும் அருட்செய்தி!

போர்க் காலத்தில், நாம் அடைந்த துன்பங்கள், இழந்த இழப்புக்கள் அநந்தம் பட்ட வேதனைகள் அதிகம் இன்னும் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நம் மக்கள் குறிப்பாக சிறாரும் வாலிபரும் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். இதன் மத்தியில் "இம் மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் [1 சாமு 7 : 12] என்று உறுதியான விசுவாசத்தோடு, திடமான நம்பிக்கையோடும் நலம் கூறக் கூடுமா? ஆம் உயிரோடிருக்கும் நமதாண்டவர் 'இதோ, நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்' [மத்தேயு. 28 : 20] என்று கூறிய அருள் வாக்கு நேற்றும் இன்றும் என்றும் மாறாது, என்பதை நம் உள்ளத்தில் உறுதியாக நிறுத்த வேண்டும் அப்பொழுது தான் தம் வாழ்வுக்கு வேண்டிய தெளிவைப் பெறுவோம்.

மனத்தெளிவுடன் இன்றைய அரசியல் போக்கை நாம் நோக்கும் போது குறிப்பாக ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுவதாகக் கூறிக்கொண்டு அதற்கான சூழ்நிலையை உருவாக்காமல் தமிழர்களின் அபிலாசைகளை உதாசீனப் படுத்தி வருவது, சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்து வருகிறதென்பதை நாம் மறுக்க முடியாது.

சமாதான முயற்சிகைள இராணுவ நிலைபாட்டிலிருந்து கொண்டு செயற்படுத்துவது இந்நாட்டிற்கே பாதகமான விளைவுகளை வருவிக்கும் தமிழ்த் தேசிய தலைவரின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் இது சமாதானத்திற்கு உந்துகோலாக இருக்கும் என்பதை, திருமதி சந்திரிக்கா அம்மையார் புரிந்து கொள்ள மறுப்பதேனோ?

சமாதான முயற்சிகளை அரசியல் நிலைபாட்டிலிருந்து தான் செயற்படுத்த வேண்டும். இது அரசியல் அறிஞர்கள் அறிந்த உண்மை - அயர்லாந்து கெரிலாக்கள் யுத்த நிறுத்தம் செய்தவுடன், பிரிட்டிஷ் அரசு வட அயர்லாந்துக்கு அனுப்பியிருந்த தனது முழு இராவணுத்தையும், முகாம்களுக்குள் முடக்கியது. பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்ட அனைத்துப் பாதைகளையும் போக்குவரத்துக்காக திறந்து விட்டது வீதிச்சோதனைகளையும் முற்றாக இடை நிறுத்தியது தனது அரசியல் தீர்வு நடவடிக்கைகளை இராணுவ நிலைப்பாட்டிலிருந்து கொண்டு பிரிட்டிஷ் அரசு எடுத்திருக்குமாயின் கெரிலாக்கள் தமது நடவடிக்கைகளை தொடர்ந்திருப்பார்கள்.

இதனை அறிந்தே, பிரதமர் ஜோன் மேஜர் அரசியல் நிலைபாட்டிலிருந்து முடிவு எடுத்தார் இதன் விளைவாக வட அயர்லாந்து வழமைநிலைக்குத் திரும்ப வழி ஏற்பட்டது. இனிமேல், அந்தச் சமூகத்தில் யுத்தம் ஏற்படாத அளவுக்கு அங்கு நிலைமை மாற்றம் அடைந்துள்ளது.

எனவே, ஜனாதிபதி சந்திரிக்கா இந்த உண்மையை புரிந்து கொண்டு இந்நாட்டில் சமாதான முயற்சி விரைவாகவும் பயனுளளதாகவும் அமைய இராணுவ நிலைப்பாட்டைத் தவிர்த்து. அரசியல் நிலைபாட்டிலிருந்து -- இனப்பிரச்சனையை அணுக அவரின் அமைச்சர்கள் தகுந்த முறையில் அவருக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுவோம். 'மனிதனால் ஆவது ஒன்றுமில்லை, இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை' - உயிரோடிருக்கும் கிறிஸ்து பெருமான் இன்றும் செயலாற்றுக் கொணடிருக்கிறார். அவரின் திருவுளச் சித்தம் நிறைவேற அவருடன் ஒத்துழைப்போம் வாருங்கள்

## சாதுவின் சிந்தனைகள்



### கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை

நமக்காக கிறிஸ்து பாவியாக்கப்பட்டு பாவியின் மரணம் அடைந்தார் ஒரு தீயோர் கூட்டத்தைப் பாவ வாழ்க்கையினின்று இரட்சிக்கும்படி நல்லான் ஒருவன் அவர்களோடு தங்கப் போனதைப் பற்றி ஒரு சரித்திரம் உண்டு அநேகர் இந்த தெய்வ பக்தனை தீயோர் கூட்டந்தான் என எண்ணி, ஒரு பெரிய குற்றம் நிகழ்ந்த போது இவனும் இதில் சம்மந்தப்பட்டவன் என சந்தேகித்தனர். அவனை கைது செய்து மரண ஆக்கினைக்கு தீர்த்த போது அவன் தீர்ப்பை சந்தோசமாக ஏற்றுக்கொண்டான் அந்தக் கூட்டத்தினரோ அவன் குற்றமற்றவன் என்று அறிநதிருந்தனர். அவனது மரணத்திற்கு பின் தங்களுக்காகவே மரித்தான் என்ற எண்ணம் அவர்களை உருக்கவே, அவர்களில் அநேகர் தங்கள் தீமையான வழிகளையும் செய்கைகளையும் விட்டுவிட்டனர். இயேசுவும் அது போலவே செய்தார். அவரது வல்லமை எப்பொழுதும் கிரியை செய்து கொண்டே இருக்கிறது: பாவிகள் அவரது ஆச்சரியமான அன்பால் தொடப்பட்டு மனந்திரும்பி தங்கள் இருதயத்தை அவருக்கு நேராக திருப்பும் போது அவர்கள் ஆத்துமாவிலிருந்து தீமையை அவர் வேரோடே பிடுங்கி புது ஜீவன் அருளுகிறார். அவர்கள் அவருக்கொப்பாக மாறி புது சிருஷ்டிகள் ஆகிறார்கள்.

## டாக்டர். ஜெயகுலராஜா 'மகரயாழ்' விருதுக்கு தெரிவு

அகில இலங்கைக்கம்பன் கழகத்தின் இந்த ஆண்டுக்கான 'மகரயாழ்' விருதுக்கு வைத்திய கலாநிதி துரைராசா வைலியம் ஜெயகுலராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவ்விருதுக்குரியவருக்கு ஒருலட்சம் ரூபா பணமும் தங்கப்பதக்கமும் இவ்வாண்டு சம்பன் விழா நிகழ்வில் வழங்கப்படும். 1993 ஆம் தொடக்கம் அகில இலங்கைக் கம்பன் கழகம் 'மகரயாழ்விருது' வழங்கி வருகிறது.

## கருத்தரங்கு நடைபெற்றது

நற்சமூக நடுநிலையத்தி கடந்த 16-03-95 வியாழக்கிழமை சமாதான பேச்சுக்களின் முன்னேற்றம் என்பது பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது இக்கருத்தரங்கில் அங்கிலிக்கன் ஆயர், அதி வண கெனத் பெர்னான்டோ பேசுகையில் தடம்புரண்ட சமாதானப் பேச்சை தண்டவாளத்தில் ஏற்ற வேண்டும் அதற்கு முயற்சிப்பதாக தெரிவித்தார். நாம் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இங்கு வரவில்லை சமாதானத்தை விரும்பும் தெற்குமக்களின் பிரதிநிதிகளாக இங்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# வாழும் எழுத்துக்கள்

## கவியரசு கண்ணதாசன் எழுதியவை



✲ எந்தக் குடும்பத்தில் சண்டை சச்சரவு அதிகமாக இருக்கின்றதோ! அந்த வீட்டில் குழந்தைகள் சோர்ந்து மெலிந்து போய்விடும்.

✲ ஒருவனுக்குப் பைத்தியம் பிடிக்க வேண்டும் என்றால் அவனை இருட்டறையில் அடைக்கவேண்டாம்; வேறு எந்த உபாயத்தையும் கையாள வேண்டாம் ஒரு மோசமான மனைவியை கட்டிவைத்து விட்டால் போதும்.

✲ வேலை அதிகம் உள்ளவனே நேரம் அதிகம் உள்ளவன் என்பார்கள். அவனுக்குத்தான் நேரமும் நினைப்பும் இணைந்தோடுகின்றன.

✲ எதிரி எப்பொழுதும் எதிரியே நண்பன் தான் அடிக்கடி பரிசீலிக்கப்பட வேண்டியவன்-

✲ பெரும்பாலான குடும்பங்களில் தோல்விகள் மறைக்கப்பட்டு கடமையில் பிறந்துவிட்ட குழந்தைகளுக்காக வாழ்க்கை தள்ளப்பட்டு வருகின்றது

✲ பெண்ணின் அழகு அவளைத் திருமணம் செய்து கொண்டவனுக்கே சொந்தம். மற்றவர்களுக்கல்ல பெண்மை புரிந்து கொள்ள வேண்டும்

✲ கவலையின் அளவு கையளவாக இருக்கும் வரைதான் கண்ணீருக்கும் வேலை. அது மலையளவாகும் போது மனம் மரத்துப் போகும். முதலில் கொதிக்கும் போது தான் பால் பாத்திரத்தைவிட்டு வெளியேறுகிறது முற்றக் கொதித்தால் வற்றிப்போகிறது, நிற்கின்றவரைதான் தென்னைமரத்துக்கு புயலைக் கண்டு பயம்; அதுவே விழுந்து விட்ட பிறகு எந்தப் புயல் என்ன செய்ய முடியும்

✲ ஆசை லயத்தில் கட்டுண்ட மனிதனை ஆட்டிப்படைப்பவை மூன்று. பதவி, பொருள், பெண்

✲ மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அவர்களது மரணமே கட்டுகின்றது. நாதியற்ற மரணம், நாடே திரளும் மரணம் என்று மரணத்திலும் இரண்டு வகையுண்டு.

✲ இரத்த பந்தமில்லாதவர்களையே கதறி அழவைக்கும் அற்புத மரணம் ஒருவருக்கு வாய்க்கிறதென்றால் அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்று பொருள்

✲ சுடுகாடு வரையில் தொடர்ந்து வரும் கூட்டம், சடலத்தைச் சுட்ட பின்பும் பல ஆண்டுகள் வரை நினைவிலே வைத்திருக்கிறதென்றால் அந்தச்சடலம் ஆவியோடிருந்த போது செய்த தவம் அது.

✲ நாற்றத்தை முகரும்போது அலங்கோலமாகி விடுகின்ற முகம், வாசனையை முகரும் போது அழகாகி விடுகின்றது. நல்ல சூழ்நிலைகளே மனிதனது சுகத்திற்கு முதற்படி.

✲ பார்வைக்கு பெண்கள் பளபளப்பாக இருக்கலாம். உள்ளே எவ்வளவு பாம்புகள் ஒளிந்து கொண்டிருக்குமோ யார் கண்டது?

✲ கோடை காலத்திற்குப் பின்னால் வசந்த காலம் வந்தே தீரும் என்பது கோடைக்கு புரிவதில்லை. வசந்தம் வந்ததுந் தான் புரிகிறது. துன்பங்கள் முடியக் கூடியவையே. சோதனைகள் எதிர்ப்பார்க்கவேண்டியவையே. அவற்றை சந்திப்பதில் தான் மனிதனின் சக்தி அடங்கி கிடக்கிறது.

✲ தனிமை சிந்தனையைத் தூண்டுகின்றது. அந்தச் சிந்தனை கடுகை ஆலமரமாக்கிவிடுகின்றது.

✲ உள்ளுக்குள் இருக்கும் வேதனையைச் சொல்லித்தீர்த்து விட்டால், மனிதனின் கனம் இறங்கி விடுகின்றது. உடம்பின் கொதிப்பும் குறைந்து விடுகின்றது. ஆனால் எல்லா உண்மைகளுக்கும் ரிவவடிவம் கிடையாதே.

---

### சமாதானப் பேச்சு, மோதல் தவிர்ப்பு உடன்பாடு என்பவற்றில் இருந்து புலிகள் விலகினர்.

சிறீலங்கா அரசுடன் கடந்த ஆறு மாதகாலமாக நடத்தி வந்த சமாதானப் பேச்சிலிருந்தும் கடந்த மூன்று மாத காலமாக நடைமுறையிலிருந்து வந்த மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டதாக அரசுக்கு அறிவித்துள்ளனர்.

### சென்னையில் இலங்கை வங்கிக்கிளை

தமிழ் நாட்டில் தலைநகர் சென்னையில் தனது கிளை ஒன்றை அடுத்த மாதம் இறுதியில் இலங்கை வங்கி திறக்கவிருக்கிறது இலங்கையின் துணைத் தூதுவர் சுகித்தாயி கௌதமதாஸா சென்னையில் இத்தகவலை தெரிவித்தார்.

### சிரிக்க — சிந்திக்க

#### நரகம்

ஒரு பெண் தன் கணவனின் ஆவியோடு பேசினாள்.

மனைவி:. நீங்கள் எம் வீட்டில் இருப்பதைப் போல மகிழ்ச்சியாகவா இருக்கிறீர்கள்?

கணவன்:- அதைவிட மகிழ்ச்சியாய் இருக்கிறேன்

மனைவி:- அப்படியா? மோட்சம் எப்படி இருக்கிறது என்று சொல்லுங்களேன்?

கணவன்:- நான் மோட்சத்தில் இல்லை கண்ணே நரகத்தில் தான் இருக்கிறேன்

சண்டைக்காரியும் வீண் கோபக்காரியுமான மனைவியுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் நரகம் நன்றாயிருக்கும் போலும்

ஆர். எஸ். ஜெ

### நிமிடச் செய்தி

விந்தை மனிதர்கள் பலர் இருக்கிறார்கள் அவர்கள் போக்கும் செயலும் நமக்குவிளங்குவதில்லை. அவைகளைப் பார்க்கும் போது நமக்கு சிரிப்புத்தான் வருகிறது.

ஒரு விந்தை மனிதர் என்ன செய்தார் தெரியுமா? தம்முடைய நிழலைத் தம்மைவிடவும் உயர்ந்ததாக கருத ஆரம்பித்து விட்டார்: தம்முடைய நிழலுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வார் பாதையில் நடந்து போகும் போதும் தம் நிழல்மேல் யாரும் நடக்காமல் எந்த வண்டியும் ஓடாமலும் பார்த்துக்கொள்வார்.

வீட்டில் படுத்துறங்கும் போகும் போது விளக்கை போட்டு விட்டு கட்டிலுக்கருகில் வளைந்து குனித்து நின்று கொண்டிருப்பார். ஆமாம் கட்டிலில் அவர் நிழல் கவலையின்றி கண்ணுறங்குவதற்காகதான்: இப்படியும் ஒரு மனிதர் என்கிறீர்கள் இல்லையா?

கொஞ்சம் சிந்தித்து பார்த்தால் நாமும் கூடச் சில வேளைகளில் அந்த மனிதரைப் போல் நடந்து கொள்வதை கண்டு கொள்ளலாம்.

மரபுகளுக்கும் சடங்குகளுக்கும் ஆசரிப்புகளுக்கும் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்கும்போது தாம் அவைகளுக்கு அடிமைகளாகி விடுகிறோம் என்றுதானே பொருள் ஓய்வு நாளுக்காக மனிதன் உண்டாக்கப்படவில்லை. மனிதனுக்குத்தான் ஓய்வு நாள் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்கிறார் ஆண்டவர்.

எமது முக்கியம்—வெளிப்புறமா? உட்புறமா? வாழ்க்கையா, வழி வழியே வரும் மரமா? பணியா, பாரம்பரியமா? சேவையா, சடங்கா? நானா என் நிழலா? எது முக்கியம் என்று நாம் கேட்டுப் பார்த்துக்கொள்வது நல்லது.

T. D. F.

The Morning Star
Diocesan Office, Vaddukoddai 21 . 04. 1995

## EDITORIAL

# THE EMPTY TOMB

As I sat down to prepare my sermon for Easter, I was impelled to contemplate on the feelings of Mary Magdalene at early hours of the first day of the week, as she stood in front of the empty tomb, where her Lord's body was laid. When she came to the tomb she was shocked and amazed. Dejection, fright, hatred, and anger were all [mingled up in her feelings.

How wicked the enemies of Jesus could have been, she might have thought. They insulted him, humiliated him and crucified him. But now, not satisfied with killing Him on a cross, they were inflicting further indignities on His dead body. Then my mind drifted a little backwards and I remembered how a few people in Jaffna tried to identify their loved ones among the debris. The armed forces have burnt a few cyclists with tyres on a New Year day, a few years back. Were they burnt alive or killed and burnt - nobody knows. But one thing is sure, man is so brutal that he will not leave even the dead bodies of his enemies unturned in the grave. Man is not satisfied until the last traces of his enemy are wiped off the face of the earth.

I allowed my mind to wander a little further and I recollected an incident that happened a decade and a half ago. A colleague of mine, a senior officer in a state-owned industry was dismissed after a sham inquiry and disciplinary action. Not satisfied, they further humiliated him by taking him, with all his belongings - lock, stock and barrel - through each and every nook and corner of the housing scheme of the corporation. The man behind all this was none other than the Manager and a colleague Man often forgets his position and status in the society and stoops down to lower depths in trying to ridicule others.

When Jesus was hanging on the cross, the whole crowd including the Chief Priests passed derogatory remarks and laughed haughtily at him. They waited there till they made sure that Jesus was dead - clinically as well as theologically. Then they wanted to seal his tomb. Were they trying to ensure that the whole truth is buried with him and that not even a trace could leak out? Perhaps they thought they have sealed the lips by sealing the tomb.

Mary, perhaps let her imagination flow and thought that, they were not satisfied by sealing the lips; where will it all end? She felt an eerie feeling creeping. We may be their next target; They may hunt for us and destroy us. Then something else happened. She felt that someone was standing behind. She heard a familiar voice. She distinctly heard someone calling her by her name. "Mary".

Yes it was her Lord. Jesus is alive. He rose again. He is never going to die again. The tomb could not conceal the TRUTH. It had to give up. Now the empty tomb stands as a symbol of judgement. All those who thought that, they have buried the truth will have to face the very truth. They all will be tormented by the truth which they tried to destroy.

Coming back to the two incidents, I quoted earlier -today, we find commissions being appointed to inquire into the cases of disappearance. Graves are being dug out and the skeletons reveal the truth, and the pretentious people are exposed. Sometime later, one night, the Manager who was responsible for the dismissal of my colleague scooted off - he couldn't face people. The very same Chairman, who ordered the inquiry was himself asked by the Minister to quit.

The resurrected Jesus today stands as the Judge of the world. The whole world stands condemned before Him. People tend to hide their sins and wickedness in the darkness But when the bright light shines nothing can be hidden. Perhaps. the brightness blinds some people and they think that nobody knows the truth

The empty tomb also gives us all, who believe in Jesus, new hope and courage Mary, with new hope goes back to the brethren and proclaims. "I have seen the Lord." The disciples who locked themselves up hitherto, have now started to venture out and proclaim the good news of hope.

The good news of hope, the empty tomb reveals, is that truth cannot be hidden. It may be that you live a dejected life; you may be hated by all for no fault of yours but step out of darkness from where you are hiding; she day light is breaking. The truth will be revealed and you will become accepted. To all those who still live in wickedness, those who are still bent on doing harm to others, and those who point an accusing finger at innocent people, the empty tomb stands as a seat of judgement. The wickedness of such will be brought to light.

## Obituary

The death occurred on Tuesday the 30th March of Mr David Kandiah of Kaluwanchikudy. The funeral took place at his residence at Kaluwanchikudy on Saturday the 1st April. Mr. David Kandiah is the father of Rev. Edward Jeyarajah and the grandfather of Miss. Gunadevi Gunaratnam, the newly appointed Chaplain of Uduvil Girls' College. The funeral was conducted by the Revds .S.Arulrajah & Jeyarajah of the Methodist Church. They were assisted by the Rev. Edward Jeyarajah and the Rev. Earl P Solomons of the CSI Church and the remains were then removed to Kaluwanchikudy Methodist cemetery for interment. Mr. David Kandiah leaves behind beside his wife, 4 daughters and three sons to bemoan his death

## 'Morning Star' Subscribers

(Continued from page 2)

### Kilinochchi And Paranthan

The Librarian
Y T C Paranthan

The Director
Navajeevanam Murasumoddai
Paranthan

The Manager
Karunanilayam Kilinochchi

Mr S Mahilraja
Shalom Nagar Farm Kilinochchi
J D C S I Hospital
Murasumoddai

### Mankulam and Vavuniya

Mr K Arasakulasingam
U N H C R Office Vavuniya

### Kandy and Kurunegala

The Bishop of Kurunegala
Church of Ceylon Bishops House
Kurunegala

The Librarian
Christian Theological Seminary
Pilimatalawa

Mrs H S Ratnam
95/15 Kingsgarden Kandasamy
Kovil Road Trincomalee

## Visit to Batticaloa

(Continued from page 1)

Rev.Earl P.Solomons, the worker in - charge, Batticaloa. The team visited the Boys' Home, Girls' Home and the Day Care Centre at Urani and the Day Care Centres at Kiran, Kalkudah, Karadiyanaru, and Periya Neelavani. Rev. S. Jeyanesan who will assume duties in Batticaloa on the first of May made a study of the Church Centres along with the teachers and pastors working in those projects.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, 182, 1st Cross Street, Jaffna on Friday the 21st of April 1995 and published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.